**29.01.2025.** CC. 44/2007 PW.1 திருமதி. கிளமன்சியாள்

**கடந்த 09.10.2024 ம் தேதி குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

10. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். 12.12.2006 ம் தேதி எனது விசாரணையில் 1 மற்றும் 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மனுதாரரின்தகப்பனார் வீட்டிற்கு வந்து வீட்டை உடைத்ததாக எனதுவிசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. அதுபோல் 15.01.2007 ம் தேதி எனது விசாரணையில் மனுதாரரின் அப்பா வீட்டை 1 மற்றும் 4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் உடைத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

11. மனுதாரருக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் 1998 முதல் 2006 வரை பிரச்சினை இருந்ததாக சொன்னதைப் பொறுத்து கருங்கல் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்ததாக சொல்லியுள்ளரா என்றால் இல்லை. மேற்படி காலகட்டத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக எங்களது காவல்நிலையத்தில் புகார் எதுவும் மனுதாரர் கொடுத்தாரா என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை, குறிப்பிடவுமில்லை.

12. 12.12.2006 முதல் நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவம் குறித்து தனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னதைப் பொறுத்து அதற்கு சித்த மருத்துவம் எடுத்துக்கொண்டதாக புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 12.12.2006 அன்று மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தைப்பொறுத்து நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் காலம் வரை அவர் யாரிடம் சிகிட்சை எடுத்துக்கொண்டார் என்று எனது விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

13. மனுதாரர் கையில் காயம் இருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் கம்புகள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கில் காலதாமாமாக ஏன் புகார் மனு கொடுக்கப்பட்டது என்ற சங்கதியை நான் எனது புலன்விசாரணையில் தெரிந்து வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் நான் பதிவுச் செய்த வாக்குமூலத்தில் தன் கணவர் திருந்தி வந்துவிடுவார் என்பதால் கொடுக்கப்படவில்லை என்று புகார் மனுவில் சொல்லியுள்ளார்.

14. புகார் மனுவில் 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் உறவில் இருந்ததாக சொல்லப்படும் பெண்ணைப் பற்றி நான் விசாரித்து அது தொடர்பாக வாக்குமூலம் எதுவும் பதிவுச்செய்தேனா என்றால் இல்லை. மேற்படி உறவு சம்மந்தமாக சங்கதிகள் தொடர்பாக புகார்தாரர் கருங்கல் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்த சங்கதி என் விசாரணையில் துலங்கியதா என்றால் சொல்லப்படவில்லை. 12.12.2006 ம் தேதி மனுதாரர் எங்கள் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை.

15. 12.12.2006 ம் தேதி காயம்பட்ட நபர் எங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும், அந்த புகாரை மறைத்து வழக்கிற்கு தகுந்தாற்போல் ஆவணங்களை உருவாக்கி ஜோடித்து அதன் அடிப்படையில் புகார் உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவுச் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவுச் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனு நான் சொன்ன தேதியில் பதிவுச் செய்யப்பட்டிருந்தால் அன்றையதினமே நீதிமன்றத்திற்கு வந்தடைந்திருக்கும் என்றால் சரியல்ல.

16. இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் வழக்கு சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள நபர்கள் இல்லை என்றால் சரிதான். அ.சா1ஐத் தவிர சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகிலுள்ள நபர்கள் மற்ற சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் நான் சொன்ன வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் நான் எனது பார்வை மகசரில் சொல்லியுள்ளேன்.

17. மேற்படி வரைபடத்தில் எத்தனை அறைகள் உள்ளது என்பதை குறிப்பிடவில்லை என்றால் பார்வை மகசரில் சொல்லியுள்ளேன். புகார் மனுவிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சம்பவயிடம் எந்த அறையில் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் தகப்பனார் வீட்டிற்கும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் வீட்டிற்கும் இடையே எத்தனை கி.மீ தொலைவு இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. வாதியின் தகப்பானர் வீடு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் ஞாபகமில்லை.

18. பார்வை மகசர் சாட்சிகளை தவிர்த்து மற்ற சாட்சிகளை எங்கு, எப்போது விசாரித்தேன் என்றால் நேரம் மற்றும் இடம் குறிப்பிடவில்லை. ஆனால், அவர்களை வீட்டில் வைத்து விசாரித்தேன். அ.சா.4 சதாரன் எனது விசாரணையின்போது 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வரதட்சணை கேட்டதாக சொல்லியுள்ளரா என்றால் - ஆம் சொல்லியுள்ளார். 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா1ன் சகோதரியிடம் வரதட்சணை கேட்டதாக சொல்லியுள்ளரா என்றால் இல்லை.

19. 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் அ.சா4 யிடம் எந்த தேதியில் வரதட்சணை கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தேதி சொல்லப்படவில்லை, ஆனால் சுமார் 6 மாதத்திற்கு முன்பு என்று சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்லக்கூடிய நாளில் சாட்சிகளை விசாரித்து வழக்கு ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 15.01.2007 ம் தேதி விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் சுமார் 4 மாதங்கள் தாமதமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளன என்றால் சரிதான்.

20. நான் சரியாக முதல் விசாரணை செய்யாமல் தவறுதலாக விசாரணைச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் அ.சா1ன் சகோதரருக்கும் இடையே இருந்த தொழில் போட்டி காரணமாகவும், 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் 3வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு காதல் திருமணம் செய்து வைத்திருந்த கோபத்தில் அ.சா1 வீட்டில் படிக்கட்டில் தவறி விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பழி வாங்க வேண்டுமென்ற காரணத்தினால் அ.சா2ன் தூண்டுதலின் காரணமாக அ.சா1 நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி உண்மைக்கு மாறாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

21. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வாதியிடம் வரதட்சணை வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் உண்மைக்கு மாறாக முதல் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் வாதியின் திருமணத்தின் போது தாலி, வளையல்கள் போட்டு நன்றாக பார்த்துக்கொண்டார்கள் என்றால் முதல் 5 வருடங்கள் சந்தோஷமாக பார்த்துக்கொண்டதாக தான் சொல்லப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.